*10*

# தெற்கு இராஜ்யம்,

# கி.மு. 722–586

## *ரெகொபெயாம் அரியணை ஏறியதிலிருந்து எருசலேமின் வீழ்ச்சி வரை*

## *1 இரா. 12-22; 2 இரா. 1-25; 2 நாளா. 10-36*[1]

***அறிமுகம்.***—*சமாரியாவின் வீழ்ச்சியானது இஸ்ரவேல் இராஜ்யத்திற்கு ஒரு முடிவைக் கொண்டு வந்து, இரட்டை இராஜ்யத்தின் காலத்தை முடித்து வைத்தது. (அதன் பின்) யூதா ஏறக்குறைய நூற்று ஐம்பது ஆண்டுகள் காலத்திற்கு நீடித்திருந்தது; சமாரியாவைக் கைப்பற்றிய நிகழ்ச்சியானது இஸ்ரவேலைக் காட்டிலும் யூதாவுக்கு மிகவும் முக்கியத்துவமற்றதாக இருந்தபடியால், யூதாவின் வரலாற்றில் நானூறு ஆண்டுகள் காலத்தை ஆய்வு செய்வதினால் நாம் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கலாம்.*

யூதாவின் வரலாறு ஒரு மாபெரும் பெயரின் நீடித்திருக்கும் செல்வாக்கை விவரிக்கிறது. தாவீதின் ஆளுகையானது தனிச்சிறந்த உயர்ந்த இராஜாவையும் இராஜ்யத்தையும் அளித்திருந்தது. நாட்டின் தீர்க்கதரிசனம் சார்ந்த நம்பிக்கைகளும் உள்ளுணர்வுகளும் அவரையும் அவரது வம்சத்தையும் ஒன்றிணைத்து (சிதறாமல் காத்து) வைத்திருந்தது. சாலொமோனின் விக்கிரகாரதனைகளின் ஒழுக்க ரீதியான அதிர்ச்சிக்குப் பின்பு, அவர்கள் சற்றுக் காலம் யெரோபெயாமுடனும் வடக்கு இராஜ்யத்துடனும் ஒன்றித்திருந்தார்கள். ரெகொபெயாம் கலகத்தை அடக்க முயற்சி செய்யவில்லை. யெரொபெயாமும் யெகூவும் அரச வம்சங்களைத் தோற்றுவிப்பவர்கள் என்று தீர்க்கதரிசனமாகக் குறிப்பிடப்பட்டிருந்தார்கள்; ஆனால் இருவருமே தீர்க்கதரிசனத்துவ நம்பிக்கைகளை முற்றிலும் ஏமாற்றப்படுத்தி விட்டார்கள். கடைசியில், சமாரியாவும் இஸ்ரவேலும் அசீரியாவுக்கு முன்பாகத் தாழ்ந்து சென்ற பிறகு, யூதாவின் சிறிய இராஜ்யமானது அதன் மிகச் சிறந்த கருத்தில், "முழு இனம் சார்ந்த ஆவியைத் தனக்குள் ஒன்றுகூட்டியிருந்தது."

உண்மையான மதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியைக் கண்டறிதல் என்ற வேதாகம வரலாற்றின் முதன்மை நோக்கத்தை நாம் மறந்து விடக் கூடாது. அந்தக் குறிக்கோளுடனேயே எபிரெய வரலாறானது படிக்கப்பட வேண்டும். இவ்விதமாய்க் கண்ணோக்கினால், தெற்கு இராஜ்யத்தின் நானூறு ஆண்டுகள் வீழ்ச்சி மற்றும் எழுச்சி ஆகியவை நான்கு கால கட்டங்களாகப் பிரிக்கப்படலாம், அவை ஒவ்வொன்றும் அந்தந்தக்

காலத்தில் ஆண்டு கொண்டிருந்த அரசர்களின் பண்புடன் நெருக்கமாய் இணைக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேலைப் போலின்றி, யூதா அரசின் ஆட்சிக் காலம் முழுவதிலும் தாவீதின் வம்சம் மட்டுமே ஆண்டு வந்தது என்பதும் நினைவுகூருவதற்கு நல்ல விஷயமாகவே உள்ளது.

## I. முதல் வீழ்ச்சியும் எழுச்சியும்.

### நான்கு ஆளுகைகள், தொண்ணூறு ஆண்டுகள்.

***1. ரெகொபெயாம் மற்றும் அபியா ஆகியோரின்கீழ் வீழ்ச்சி.—*** *அ. மதம்/மார்க்கம்.—*சாலொமோனின்கீழ் தொடக்கம் பெற்ற புறதெய்வ வழிபாட்டு விருப்பங்கள் அடுத்த இருபது ஆண்டுகள் காலத்திற்குத் தொடர்ந்து பெருகியது. தீர்க்கதரிசிகளின் மறுப்புகள் இருந்த போதிலும், தேவனுக்கு ஆராதனை செய்தல் வீழ்ச்சியுற்று, நாடு முழுவதிலும் புறதெய்வ வழிபாட்டு மேடைகள் பெருவளர்ச்சி பெற்று, மக்களின் மத்தியில் முழுமையான ஒழுக்கவீனங்கள் பரவி மலிந்தன.

*ஆ. இஸ்ரவேலுடன் தொடர்புகள்.—*யெரொபெயாமின் கீழ் பத்து கோத்திரங்கள் விலகிச் சென்ற வேளையில், கலகத்தை அமர்த்துவதற்காக ரெகொபெயாம் ஒரு படையை எழுப்பி ஏவினார்; ஆனால் தீர்க்கதரிசியான செமேயாவின் அறிவுரையைக் கேட்டு அதற்கு இணங்கி அந்த முயற்சியை கைவிட்டார். இருப்பினும் இரண்டு இராஜ்யங்களும் (ஒன்றின் மீது மற்றொன்று) வெறுப்புணர்வைத் தொடர்ந்து கொண்டிருந்தன; மற்றும் அபியாவின் மூன்றாண்டுகள் கால ஆட்சியின்போது, செமராயீம் என்ற இடத்தில் நடந்த போரில் அவர் இஸ்ரவேலின்மீது நொறுக்கப்பட்ட தோல்வியைத் திணித்தார்.

*இ. சீசாக்கின் படையெடுப்பு.—*சாலொமோன் எகிப்திய இளவரசி ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டிருந்தார்: ஆனால் யெரொபெயா முக்கு ஆதரவளித்த ஒரு புதிய அரச வம்சமானது நைல் நதியண்டையில் எழும்பிற்று. இந்த வம்சத்தின் அரசரான சீசாக் பலஸ்தீனத்தில் படை யெடுத்து எருசலேமைக் கைப்பற்றினார், மற்றும் தேவலாயத்தின் மேன்மை மிக்க பொன் பொருட்கள் யாவற்றையும் எடுத்துக் கொண்டு போனார். சீசாக் தாமே கார்னாக்கில் இருந்த மாபெரும் ஆலயத்தில் மனதில் பதியும் வகையில் வேதாகம விபரங்களின் உறுதிப்பாடு ஒன்றை விட்டுச் சென்றுள்ளார்.[2]

***2. ஆசா மற்றும் யோசபாத் ஆகியோரின் கீழ் எழுச்சி/உயிர்ப்பித்தல்.—*** *அ. சீர்திருத்தங்கள்.—*ஆசாவின் நாற்பத்தியோரு ஆண்டு கால ஆளுகை யானது அவருக்கு முன்னிருந்த இரண்டு அரசர்களின் ஆட்சியிலிருந்து தூய்மையிலும் பலத்திலும் குறிப்பிடத் தக்க வகையில் மாறுபடுகின்றது. அவர் பல ஆண்டுகளுக்கு ஆழ்ந்த அமைதியை மகிழ்வுடன் அனுபவித்தார், இதை அவர் புறதெய்வ வழிபாட்டு மேடைகளையும் சொரூபங்களையும் அகற்றியதாலும், யெகோவாவுக்கு ஆராதனையை மீண்டும் ஒழுங்கு படுத்தியதாலும் மேம்படுத்தினார். யோசபாத் இருபத்து ஐந்து ஆண்டுகள் அளவாக நீதியாக ஆண்டு வந்தார். மேலும் அவர் தமது தந்தையின்

*சீர்திருத்தப் பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி, முறையான மத அறிவுறுத்தலுக்கு வழியளித்து, யூதத்துவ முறை/அமைப்பைப் புரிந்து கொண்டு மேம்படுத்தினார்.*

*ஆ. எத்தியோப்பியரான சேராவின் படையெடுப்பு.—சேராவின் கீழ் பத்து லட்சம் பேரின் படையெடுப்பினால் ஆசாவின் அமைதி முறிக்கப் பட்டது. தேவனிடத்தில் உற்சாகமான ஜெபத்துடன் ஆசா யுத்தத்திற்குச் சென்றார், யூதா அந்தப் பகுதியிலிருந்து அடுத்த முந்நூறு ஆண்டுகளுக்கு யுத்தத்தால் பாதிக்கப்படாதபடிக்கு அவ்வளவு தீர்மானமான வெற்றி யடைந்தார். அந்த வெற்றியை ஆசா, ஒரு மாபெரும் சபை கூடுதலில் கொண்டாடினார், அக்கூட்டத்தில் இன உடன்படிக்கை புதுப்பிக்கப் பட்டது மற்றும் சீர்திருத்தப் பணியானது இன்னமும் மேம்படுத்தப்பட்டது.*

*இ. திருமண ஒப்பந்தம்.—ஆசா தமது வாழ்வின் பிற்பகுதியில் இஸ்ரவேலுக்கு எதிராக சீரியாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். யோசபாத் தமது தந்தையின் கொள்கையைத் திருப்பிப் போட்டு, இஸ்ரவேலுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார், தமது மகனை ஆகாபின் மகளுடன் திருமணத்தில் இணைத்து வைத்து, சீரியருக்கு எதிராக ஆகாபுக்கு உதவி செய்தார்.*

## II. இரண்டாம் வீழ்ச்சியும் உயிர்ப்பித்தலும்/ எழுச்சியும்.

### ஒன்பது ஆளுகைகள், இருநூறு ஆண்டுகள்.

*1. **வீழ்ச்சி.**—அ. யோராமும் அத்தாலியாளும்.—யோசபாத்தின் மகன் யோராம் அரியணைக்கு வந்தார். அவர் ஆகாபின் மகளான அத்தாலி யாளைத் திருமணம் செய்து கொண்டிருந்தார். அவள் தனது தாயாகிய யேசபேலின் உக்கிரமான ஆவியையும் பாகால் வணக்கத்தையும் யூதா நாட்டிற்குள் கொண்டு வந்தாள். ஆசா மற்றும் யோசபாத் ஆகியோரின் பணியானது எடுத்துப் போடப்பட்டது தெளிவாய்க் காணப்படுகின்றது. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு யோராமுக்கு அடுத்து அவரது மகன் அகசியா அரசாள வந்தார்; ஆனால் ஓராண்டிற்குள்ளாகவே அவர் ஆகாபின் வீட்டாருக்குத் தண்டனையளிக்க (கர்த்தரால் நியமிக்கப்பட்டு இருந்த) யெகூவினால் இரக்கமற்ற அழிவில் வீழ்ந்தார்/மாய்ந்தார். அத்தாலியாள் தப்பிச் சென்று, அரசின் ஆளுகைகளைக் கைப்பற்றிக்கொண்டு சிறு குழந்தையாயிருந்த யோவாஸைத் தவிர அரச குடும்பத்தில் யாவரையும் கொன்று போட்டு, ஆறு ஆண்டுகள் காலத்திற்கு யூதாவின் யேசபேல் என்பதைக் காட்டிலும் அதிக கொடுமையானவளாயிருந்தாள். இப்பொழுது தாவீதின் வம்சமானது ஒரு சிறு குழந்தை மட்டுமே உயிருடன் இருக்கும் அளவு குறைக்கப்பட்டது, மற்றும் அவரது (தாவீதின்) அரியணையில் ஒரு புறதெய்வ வணக்கம் செய்யும் அரசி வீற்றிருந்தாள்; தாவீதின் சந்ததியானது அழிவின் விளிம்பருகில் அவ்வளவாய் நெருங்கிற்று; யோசபாத்தின் தவறான திருமணக் கொள்கையானது அவ்வளவு கசப்பான கனிகளைக் கொண்டு வந்தது.*

*ஆ. யோவாஸும் பதில்செயலும்.*—யோய்தா என்ற முதிர்வயதான பிரதான ஆசாரியரால் எழுப்பப்பட்ட கலகம் ஒன்றில் அத்தாலியாள் கொல்லப்பட்டாள், அவர் இளைஞனான யோவாஸை அரியணையில் அமர்த்தினார். ஒரு சில ஆண்டுகள் காலத்திற்கு அரசாட்சியானது அதன் தூய்மையான நாட்களுக்குத் திரும்பச் சென்றது போல் தோன்றிற்று; ஆனால் யோய்தாவின் மரணத்திற்குப் பிறகு கீழ்நோக்கிச் செல்லும் போக்குகள் மீண்டும் பெருகின, மற்றும் யோவாஸின் ஆட்சியின் கீழ் சகரியா இரத்த சாட்சியாக மரித்தார்.

*இ. உசியா.*—பின்வந்த அமசியா, உசியா மற்றும் யோதாம் ஆகியோரின் மூன்று ஆட்சிகளில், உசியாவின் ஆட்சி மிகவும் குறிப்பிடத் தக்கதாக உள்ளது. அது திடமானதாயிருந்தது, முக்கியமாக அது ஐம்பத்து இரண்டு ஆண்டு கால வளமிக்க ஆட்சியாயிருந்தது. அவருடைய வெற்றிகளே அவருக்கு அழிவாய் இருந்தது. தூபம் காட்டுதல் என்ற ஆசாரியருக்குரிய செயலை இவர் அரசருக்குரியதாகத் தப்பாக எண்ணிச் செயல்பட்டதால் தொழு நோய் இவரைப் பற்றியது, அதிலிருந்து இவர் ஒருக்காலும் குணமடையவில்லை.

*ஈ. ஆகாஸும் விசுவாச விலக்கமும்.*—விக்கிரகாராதனையின் செல்வாக்குகள் ஆகாஸின் ஆட்சியில் வெளிப்படையான பொதுவான விசுவாச விலக்கத்தில் முதிர்வடையும் வரையிலும் ஆழமாய் வேர் கொண்டன. பாகாலுக்கு பலிபீடங்களையும் சொரூபங்களையும் எல்லா இடங்களிலும் வைத்ததுடன் திருப்திப்படாத ஆகாஸ், "தன் குமாரர்களை முதலாய் தீக்கடக்கப் பண்ணினான்";[3] அதாவது அவர்களை மோளேகு தெய்வத்திற்குப் பலி செலுத்தினார். ஒழுக்கச் சிதைவைத் தொடர்ந்து அரசியல் வீழ்ச்சி வந்தது. ஏதோமியர், பெலிஸ்தர், சீரியர், மற்றும் வீழ்ச்சியின் அருகாமையில் இப்பொழுது இருந்த இஸ்ரவேலராலும் கூட தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு ஆகாஸ், இப்பொழுது வல்லமையின் உச்சத்தில் இருந்த அசீரியாவுக்குத் திரளான கப்பம் செலுத்தி பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டார்.

***2. எசேக்கியாவின் கீழ் எழுச்சி/உயிர்ப்பித்தல்.***—*அ. ஏசாயாவும் சீர் திருத்தமும்.*—நமக்குக் கிடைத்துள்ள புத்தகங்களை எழுதிய யூதாவின் தொடக்க காலத் தீர்க்கதரிசிகளின் கால கட்டத்தை நாம் அடைந்துள் ளோம்: யோவேல், ஆமோஸ், மீகா, நாகூம் மற்றும் ஏசாயா. ஏசாயாவின் தீர்க்கதரிசன எழுத்துக்கள் "ஐந்தாம் சுவிசேஷம்" என்று அழைக்கப்படலாம், இவர் நான்கு (அரசர்களின்) ஆளுகை காலங்களின் பகுதிகளில் பிரசங்கித்து, ஆலோசனை அளித்து, தீர்க்கதரிசனம் உரைத்தார். இவரே எசேக்கியாவின் ஆளுகை காலத்தில் புகழ்மிக்கவராயிருந்தார். சொல்லப் போனால் இவரே யூதாவில் ஆசாரியரையும் அரசரையும் நிழலிடுகின்ற/மேல் கவிகின்ற முதல் தீர்க்கதரிசியாய் இருக்கின்றார். இஸ்ரவேலில் எலியா மற்றும் எலிசா ஆகிய இருவருமே தங்கள் வீரப்பண்பு ஆளுமைகளால் ஒப்பீட்டளவில் அரசர் களைக் குறுகியவர்களாக்கியிருந்தார்கள். யூதாவில் அது போன்ற இடத்தை நிரப்புவதில் ஏசாயா முதலாமவராயிருந்தார். அவர் ஒரு அரசியலாளா ராகவும் தீர்க்கதரிசியாகவும் இருந்தார், மற்றும் அவர் அரச அரண்மனையில்

அதிகம் காணப்பட்டார். அவரது எரிக்கும் வார்த்தைகள் ஆகாஸின் ஆட்சியில் தொலைந்து போனவைகளாய்க் காணப்பட்டாலும், கடைசியில் அவைகள் கனிகளைத் தந்தன. வடக்கு இராஜ்யமானது அசீரியாவுடனான தனது மரணப் போராட்டத்தில் இருக்கையில், ஏசாயாவின் ஆலோசனை யினால் ஏவப்பட்ட எசேக்கியா மத சீர்திருத்தங்களை மேம்படுத்தியதினால் யூதாவுக்கு வாழ்வின் ஒரு புது அனுபவத்தைக் கொடுத்தார். தாவீதின் நாட்களில் இருந்து, நோக்கத்தில் இவ்வளவு தூய்மையுடனும் தொடர்ந்து செயல்படுதலில் இவ்வளவு நிலைப்பாட்டுடனும் (எசேக்கியாவைப் போல) ஒரு அரசர் அது வரையிலும் அரியணையில் அமர்ந்ததில்லை. பொய்யான பாகால் வணக்கமும் பயங்கரமான மோளேகு சடங்காச்சாரங்களும் ஒழிக்கப்பட்டு யெகோவாவை வழிபட வழி திறக்கப்பட்டது. அவர் (எசேக்கியா) விக்கிரகாராதனையின் பொருளாய் மாறிப் போயிருந்த மோசேயின் வெண்கல சர்ப்பத்தை அழித்துப் போட்டார், மற்றும் எருசலே மில் பஸ்கா பண்டிகையை மீண்டும் நியமித்து, அந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும்படி இஸ்ரவேலில் எஞ்சியிருந்தவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

*ஆ. சனகெரிப்பின் படையெடுப்பு.*—இந்த ஆளுகையின் போதுதான் அசீரியாவின் சனகெரிப் யூதாவின் மீது படையெடுத்து வந்தார். ஆகாஸ் அசீரியாவுக்குக் கப்பம் கட்டும்படியாயிற்று; ஆனால் எசேக்கியாவோ, ஏசாயாவின் அறிவுரைக்கு எதிராக அசீரியர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்குப் பதிலாக எகிப்தியருடன் உடன்படிக்கை செய்து கொண்டார், மற்றும் (அசீரியர்களுக்கு) கப்பம் கட்ட மறுத்தார். சனகெரிப் யூதாவின் மீது படையெடுத்து, பல நகரங்களைக் கைப்பற்றி, இரண்டு இலட்சம் பேரைப் பிடித்துக் கொண்டு போய், எருசலேமைக் கைப்பற்றி னார். அவர் பயமுறுத்தும் எகிப்தியப் படையெடுப்பாலும், விளக்கப்பட முடியாத சில பெருந்துன்பத்தினாலும் பின்னோக்கி இழுக்கப்பட்டு, ஒரே இரவில் ஒரு இலட்சத்து எண்பத்து ஐயாயிரம் மனிதர்களை இழந்து போனார். இந்த நிகழ்ச்சியைப் பற்றிய கவிதையொன்றின் தொடக்கத்தில் கவிஞர் பைரன் அவர்கள் பின்வருமாறு உரைத்தார்: “அசீரியர்கள் ஆட்டு மந்தையின்மீது ஓநாய்கள் போல வந்தனர்.’’ நினிவேயில் இருந்த சனகெரிப்பின் கல்வெட்டுக்கள் அவரது வெற்றிகளை நினைவூட்டுகின்றன, ஆனால் இந்தத் துன்பத்தை அவை குறிப்பிடுவதில்லை, ஆயினும் ஹெரோ டோட்டஸ் இதைக் குறிப்பிடுகின்றார்.

## III. மூன்றாம் வீழ்ச்சியும் எழுச்சியும்/ உயிர்ப்பித்தலும்.

### மூன்று ஆளுகைகள், தொண்ணூறு ஆண்டுகள்.

***1. மனாசே மற்றும் ஆமோன் ஆகியோரின் கீழ் வீழ்ச்சி.***—எசேக்கியா மற்றும் ஏசாயா ஆகியோரின் சீர் திருத்தங்கள் தற்காலிகமானவைகளாய் மட்டுமே இருந்தன என்பது நிரூபிக்கப்பட்டது, இந்தக் காலம் முழுவதிலும் விக்கிரகாராதனைக்காரக் கூட்டம் ஒன்று அரண்மனையில் இருந்திருக்கும்

என்பதில் ஐயம் இல்லை. எசேக்கியாவின் மரணத்தின்போது இவர்கள் மீண்டும் கை ஓங்கினார்கள், ஐம்பத்து ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்த அவரது மகன் மனாசேயின் கீழ் நாடானது முன் எப்போதும் இருந்திராத வகையில் கீழ் நோக்கிய சாலையில் மிக விரைவாய்ச் சென்றது. அறியப்பட்ட விக்கிரகாராதனைகள் யாவையும் மேற்கொள்ளப்பட்டன; பாகால் வழிபாடு, மோளேகு வழிபாடு, கல்தேயரின் விண்மீன் வழிபாடு, சூனியம், எருசலேமை இரத்தத்தினால் நிரப்பிய தீவிரமான துன்புறுத்தல் - இவை போன்றவை இந்த நீண்ட கால ஆட்சியின் குற்றங்களாய் இருந்தன. யூதத்துவப் பாரம்பரியம் நம்புதற்குரியது என்றால், இவ்வேளையில் தான் ஏசாயா இரத்த சாட்சியாக மரணம் அடைந்தார். பாபிலோனில் மனாசே தற்காலிகமாய்ச் சிறைப்பிடித்து வைக்கப்பட்டிருந்தது அவரைத் தெளிவு படுத்தி விக்கிரகாராதனையை இலேசாக கட்டுப்படுத்த உதவிற்று; ஆனால் அவரது மகன் ஆமோன் தமது தந்தையின் மிக மோசமான நடைமுறைகளை அப்படியே செய்து ஒரு புரட்சியில் அழிந்து போனார்.

***2. யோசியாவின் கீழ் எழுச்சி/உயிர்ப்பித்தல்.***—*அ. எரேமியாவும் சீர்திருத்தங்களும்.*—ஆமோனின் மரணம் எட்டு வயதுக் குழந்தையாய் இருந்த யோசியாவை அரியணைக்குக் கொண்டு வந்தது. அவரது முப்பத்தி ஒரு ஆண்டுகள் ஆட்சியானது அந்தச் சிறு இராஜ்யத்திற்கு சூரிய ஒளியின் கடைசிப் பிரகாசமாய் இருந்தது, அவர் இராஜரீக சீர்திருத்தவாதி என்ற வகையில் எசேக்கியாவுடன் மதிப்பிடப்படுகின்றார்; மற்றும் எரேமியா அவருக்கு உடனிருந்தது, ஏசாயா எசேக்கியாவுடன் இருந்தது போன்ற தாகவே கருதப்பட்டது, தொடக்க காலச் சீர்திருத்தங்கள் பெண் தீர்க்கதரிசி யான உல்தாள் என்பவளால் ஏவப்பட்டிருப்பினும், எரேமியாவின் மாபெரும் நடவடிக்கையானது யோசியாவின் மரணத்தைத் தொடர்ந்து வந்த இருள்மிக்க ஆண்டுகளில் இருந்தது. பதினாறாம் வயதில் யோசியா (நாட்டை ஆளும்) விஷயங்களைத் தனது கைகளில் எடுத்துக் கொண்டார் என்று காணப்படுகின்றது, மற்றும் அவர் தனிப்பட்ட வகையில் தேவனிடம் திரும்பினார்; அவர் தமது இருபதாம் வயதில் எருசலேமை அதன் விக்கிரகாராதனையிலிருந்து தூய்மைப்படுத்தினார்; இருபத்து ஆறாம் வயதில் அவர் ஆலயப் பழுது நீக்கும் பணியை மேற்கொண்டார். பழுது நீக்கும் பணியின்போது, நியாயப்பிரமாணத்தின் பிரதியொன்று கண்டு பிடிக்கப்பட்டது, இது மனாசேயின் நீண்ட இருளான ஆட்சிக் காலத்தின் போது தொலைந்து போயிருந்ததாகக் கண்டறியப்பட்டது. அதன் போதனைகளினாலும் பரிசுத்த எச்சரிக்கைகளினாலும் இன்னும் ஏவப்பட்ட அவர் (யோசியா) சாமுவேலின் நாட்களில் இருந்த பிரகார மாகவே பஸ்காவைக் கடைப்பிடித்தார். இப்பொழுது அசீரியா வீழ்ச்சி யடைந்து கொண்டிருந்தது, யோசியா தனது அரசு எல்லைகளை பத்து கோத்திரங்களின் எல்லைப் பகுதி வரையிலும் விரிவாக்கினார்; குறைந்த பட்சமாக அவர் பெத்தேலிலும் சமாரியாவின் பிறநகர்களிலும் இருந்த கன்றுக்குட்டி வணக்கத்தை நீக்கிப் போட்டு, சீர் திருத்தப் பணியை மேற்பார்வையிடுவதற்காக, தாமே நாடு முழுவதும் பயணம் சென்றார்.

*ஆ. மெகிதோவில் யுத்தம்.*—யோசியாவின் வளமிக்க ஆட்சியானது

பேரழிவான முடிவைக் கொண்டிருந்தது. மாபெரும் அசீரிய மற்றும் எகிப்தியப் பேரரசுகள் மீண்டும் யுத்தம் செய்து கொண்டன. பார்வோன் நேகோ, ஐப்பிராத்தின் மேல்பகுதியில் இருந்த கர்கேமீஸ் என்ற இடத்தைக் கைப்பற்றச் சென்று கொண்டிருந்தார். இதில் ஞானமற்ற வகையில் தலையிட்ட யோசியா மெகிதோவில் நடந்த யுத்தத்தில் உயிரிழந்தார். யோசியாவின் மரணம் யூதாவிற்குப் பெரும் வீழ்ச்சியாயிற்றென்பது நிரூபிக்கப்பட்டது. இவர் ''தாவீதின் வழிகளில் நடந்த''[4] கடைசி அரசராயிருந்தார், மற்றும் இன உடன்படிக்கைக்கு இவர் பற்றுறுதியுடன் நேர்மையுடன் இருந்தார். எரேமியாவின் புலம்பல் பெரிதாயிருந்தது, இப்புலம்பல் அந்த நல்ல அரசருக்கான இரங்கற் பாடல் ஒன்றில் வெளிப்பட்டது.

## IV. *கடைசி வீழ்ச்சியும் சிறைப்படுதலும்/ பிடிக்கப்படுதலும்.*

***1. ஒழுக்கச் சிதைவு.***—யோசியாவின் சீர் திருத்தங்கள் பெருமளவுக்கு நாட்டின் உறுதிப்பாடுகளில் வேர் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாயிருந்தது. மாறாக, அவைகள் ராஜரீக அதிகாரத்தினால் வலிந்து நடைமுறைப்படுத்தப்பட்டன, அந்த அதிகாரம் ஒழிந்துபோன உடனே அவை வீழ்ந்து போயின. எரேமியாவை மையமாகக் கொண்ட ஒரு சிறிய தேர்ந்து கொள்ளப்பட்ட குழு இருந்தது, அதில் தானியேலும் அவரது தோழர்களும் இருந்தனர், அவர்களே எதிர்கால இன வாழ்விற்கான கருவான உண்மை இஸ்ரவேலர்களாயிருந்தனர்; ஆனால் நாட்டின் மக்கள் குழுவானது நம்பிக்கையற்ற வகையில் மோசம் போயிருந்தது. நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்திற்கு முன்பாகவே ஏசாயாவும் கூட, “ஐயோ, பாவமுள்ள ஜாதியும், அக்கிரமத்தால் பாரஞ் சுமந்த ஜனமும், பொல்லாதவர்களின் சந்ததியும், கேடு உண்டாக்குகிற புத்திரருமாயிருக் கிறார்கள்; கர்த்தரை விட்டு ... பின்வாங்கிப் போனார்கள் ... உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் அதிலே சுகமேயில்லை; அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது; அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது” (ஏசா. 1:4-6) என்று எழுதியிருந்தார். மற்றும் எரேமியாவின் எழுத்துக்கள் இந்த முடிவின் காலத்தின் முழுப்பகுதியும் ஆழமான இருளில் இருந்ததைக் காண்பிக்கின்றன. விக்கிரகாராதனை, குடி வெறி, பேராசை, இச்சை மற்றும் மிருகத்தனமான வன்முறை ஆகியவை குற்றங்களின் பண்புகளாயிருந்தன. இந்த ஒழுக்கச் சிதைவானது அரசியல் முடிவின் முன்னோடியாயிருந்தது.

***2. அடிமைத்தனங்கள் வரிசையாய்த் தொடருதல்.***—யோசியாவைத் தொடர்ந்து நான்கு அரசர்கள் ஆண்டனர்: யோவகாஸ், யோயாக்கீம், யோயாக்கீன், மற்றும் சிதேக்கியா. இவர்களில் மூன்றாமவர் யோசியா என்ற நல்ல அரசரின் பேரனாகவும் மற்றவர்கள் யோசியாவின் மகன்களாகவும் இருந்தார்கள். இவர்கள் யாவருமே எகிப்து அல்லது பாபிலோனின் கைபொம்மைகளாயிருந்தனர்; ஏனெனில் இந்தக் காலகட்டத்தின் முற்பகுதி

யில், பல நூற்றாண்டுகளாக மேற்கு ஆசியாவின்மீது அதிகாரம் செலுத்திய அசீரியாவின் பெருமைமிக்க தலை நகரான நினிவே, மேதியா மற்றும் பாபிலோன் ஆகியவற்றின் ஒன்றிணைந்த தாக்குதலில் மூழ்கிப் போயிற்று. அது முதல் பாபிலோனும் எகிப்தும் ஒரு திரிகையின் மேல் மற்றும் கீழ்[5] கற்களைப் போன்று இருக்க அவைகளுக்கிடையில் யூதா தூசியாக அரைக்கப்பட்டுப் போயிற்று. பார்வோன் நேகோயோவகாஸைச் சிறைப் பிடித்துக் கொண்டு, அவரது (யோவகாஸின்) சகோதரரான யோயாக்கீமை அரியணையில் அமர்த்தினார். ஆனால் பாபிலோன் ஆசியாவில் எகிப்தை ஒரு போட்டியாளராக சகித்துக் கொண்டிராது. பாபிலோனின் வல்லமை மிகுந்த அரசரான நேபுகாத்நேச்சாரினால் தொடர்ந்து நடத்தப்பட்ட படையெடுப்புக்களும் சிறையிருப்பிற்கு பிடித்துச் செல்லுதலும் இந்த நாடகத்தை முடித்து வைக்கின்றன.

*அ. முதல் சிறையிருப்பு.*—அவர் (கி.மு. 606ல்) எருசலேமைக் கைப்பற்றினார், ஆனால் யோயாக்கீம் அரசரை விட்டு விட்டு குறிப்பிட்ட சில மக்களைச் சிறைப்பிடித்துச் சென்றதுடன் திருப்தியடைந்தார், அம்மக்களில் தானியேல், சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்-நேகோ ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் அரச குல இரத்தத்தில் உதித்த இளவரசர்களாகவும், நாட்டின் மதத்தின்மீது பற்றுறுதிமிக்கவர்களாகவும் இருந்தபடியால் அவர்களை நாட்டை விட்டு வெளியேறச் செய்ததில் (யோயாக்கீம்) அரசர் மகிழ்ந்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. அவர் பதினோறு ஆண்டுகள் ஆட்சி செய்த பிறகு கொடூரமான/வன்முறையான வகையில் மரணமடைந்தார்.

*ஆ. இரண்டாம் சிறையிருப்பு.*—கி.மு. 597ல் நேபுகாத்நேச்சார் இரண்டாம் முறை படையெடுப்பை நடத்தினார். அவர் அரசராயிருந்த யோயாக்கீனைச் சிறைப்பிடித்துச் சென்றார், அவர் (யோயாக்கீன்) முப்பத்தி ஐந்து ஆண்டுகள் சிறைப்பட்டிருந்தார். அதே வேளையில் பிரபுக்களின் குலத்தைச் சேர்ந்த பத்தாயிரம் பேருடன் எசேக்கியேல் தீர்க்கதரிசியும் அடிமைத்தனத்தில் (பாபிலோனுக்கு) இழுத்துச் செல்லப்பட்டார். சிதேக்கியா அரியணையில் அமர்த்தப்பட்டார், அவர் ஐப்பிராத்தின் மாபெரும் முடியரசரின் கீழ் ஒரு சிறு பூச்சியாக பதினோறு ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

*இ. மூன்றாம் சிறையிருப்பு.*—இந்தக் காலம் எல்லாவற்றிலும் பாபிலோனிய நுகத்தின் கீழ் போரடித்த எகிப்தியக் குழு ஒன்று எருசலேமில் இருந்தது, அது எகிப்துடன் ஒரு இணைவை/ஒப்பந்தத்தை ஆதரித்துக் கொண்டிருந்தது. நாடானது பாபிலோனிய அடிமைத்தனத்தின் கீழ் எழுபது ஆண்டுகள் இருக்கும் என்ற தேவனுடைய நியாயத்தீர்ப்பை அறிவித்த எரேமியா, அந்த வல்லமைக்கு/அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கும்படி ஆலோசனை அளித்தார். இதற்காக அவர் அருவருப்பான பாதாள அறையில் சிறை வைக்கப்பட்டார். குறைந்தபட்சம் சில புதிய கலகக்காரர்கள் யூதாவுக்கெதிராக மீண்டும் ஒருமுறை நேபுகாத்நேச்சாரின் படைகளைக் கொண்டு வந்தார்கள். கி.மு. 586ல், சலிப்பூட்டும் முற்றுகையொன்றிற்குப் பின் அவர் எருசலேமைச் சிறைப்பிடித்து, சிதேக்கியாவின் மகன்களை அவர்

*கண்களுக்கு முன்பாகவே கொல்லச் செய்து அவரது கண்களைப் பறித்து, (வெண்கல) விலங்கிட்டு அவரைப் பாபிலோனுக்கு இழுத்துச் சென்றார். நகரத்தின் மதில்கள் இடித்துத் தள்ளப்பட்டன, ஆலயமும் அரண்மனை களும் தீக்கிரையாக்கப்பட்டன, மற்றும் உயர்குடி மக்கள் சிறையிருப்பிற்கு கொண்டு செல்லப்பட்டனர். எழுபது ஆண்டுகள் சிறையிருப்பில் பரிசுத்த நகருக்கான ஏக்கத்துடனும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட திரும்புதலுக் கான ஆவலுடனும் காத்திருந்த விசுவாசமிக்க ஒரு சிலரின் இருதயங்களில் இருந்ததைத் தவிர தாவீதின் நகரும், விலைமதிப்பற்ற நினைவுகளின் நகருமான எருசலேம் இருந்த சுவடே இல்லாது ஒழிந்தது.*

---

*குறிப்புகள்*

[1]*எபிரெய வரலாறு பற்றிய விவரமான மற்றும் முழுமையான படிப்பு எதிலும் தீர்க்கதரிசன எழுத்துக்கள் படிக்கப்பட்டாக வேண்டும். இவைகள் அந்த நாட்டின் பொருள் சார்ந்த, ஒழுக்கம் சார்ந்த, சமூகம் சார்ந்த மற்றும் அரசியல் சார்ந்த நிலைகளின் மீது வெளிச்ச வெள்ளத்தை வீசுகின்றன. அநேகமாக, சிறையிருப்புக்குப் பிற்பாடு எஸ்றாவினால் எழுதப்பட்ட நாளாகமங்கள் தாவீது மற்றும் அவரது வம்சத்தவரின் வரலாறாக உள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாக இருக்கிறது. சவுலின் ஆளுகையும் வடக்கு இராஜ்யத்தின் வரலாறும் ஏறக்குறைய முற்றிலுமாக ஒதுக்கப்பட்டு உள்ளது.* [2]See Edersheim, “Hist. of Israel and Judah,” Vol. V., pp. 129, 130. [3]*2 இரா. 16:3.* [4]*2 இரா. 22:2.* [5]*இவ்விடத்தில் டீன்* “nether” *என்று எழுதியிருந்தார்.*